சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

## 08-12-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : சமூக நீதிக்கான வெகுஜன இயக்கத்தின் தேவை**

**தொடக்கவுரையாடல் : சோ. தேவராஜா**

எழுத்து, வாசிப்பு, கலை இலக்கியப்படைப்பு போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால், சமூகத்தில் இயங்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

சமூக நீதிக்காகப் போராட வேண்டிய தேவை இன்று எம்மத்தியில் தீவிரமானதாக உள்ளது.

எம்மிலும் வசதி குறைந்த, எம்மிலும் வாய்ப்புக்கள் குறைந்த எமக்குக்கீழே உள்ள மனிதர்களைப்பற்றி நாம் அக்கறைப்படவேண்டும். அவர்களது மேம்பாட்டுக்காக உழைக்கவேண்டும். அப்போதுதான் மேலான சமூக அமைப்பைக் கட்டி எழுப்ப முடிவதுடன் சமூக நீதியையும் நிலைநாட்ட முடியும்.

எம்மிலும் கீழானவர்களுக்கு உதவிசெய்வது என்பது என் ஜி ஒ வகையான உதவியாக மாறி மக்களை தங்கியிருப்பவர்களாக மாற்றுவதாக அமையக்கூடாது.

"நாம் பல்லக்கில் இருந்துகொண்டு மக்களுக்கு கைகொடுக்கிறோம்" ன்ற மேட்டிமைச் சிந்தனையுடனானதாகவும் இருக்கக்கூடாது.

உதவி தேவைப்படும் மக்கள் மத்தியிலிருந்தே உதவிகள் உருவாகும்படியான கட்டமைப்பை ஏற்படுத்துவதே சமூக நீதிக்கான வெகுஜன இயக்கத்தின் செயற்பாடாக அமையும்.

இவ்வாறு மக்கள் மத்தியில் சென்று வேலை செய்வதற்காக "சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு" என்ற பெயரில் அமைப்பொன்று இலங்கையில் சங்கங்களுக்கான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான யாப்பும் எழுதப்பட்டுள்ளது.

நிதியைக் கையாள்வதில் ஏற்படக்கூடிய அபாயங்களையும் பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு, இவ்வமைப்புக்கான நிதியமானது "மக்கள் நிதியமாக" அமையவேண்டும்.

மக்கள் நிதியமென்பது மக்களால் கண்காணிக்கப்படுகின்ற, வெளிப்படையான, பொதுமக்கள் நிதியமாகும்.

நிதிவழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதியைப்பெறாமல் இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள மக்களிடமிருந்து பணத்தைத்திரட்டும் வழிமுறைகளை இவ்வமைப்புக் கையாளும்.

இதற்கென வலைத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

**கூட்டத்தில் கருத்துரைத்தவர்களது கருத்துக்கள் வருமாறு :**

உதவிப்பொருட்களை பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டு செல்வது மிகவும் சிக்கலானது. பல இடங்களில் இதற்குப் படையினரின் அனுமதி கிடைப்பதில்லை.

ஒவ்வொரு இடத்திலும் அவ்விடத்து மக்களுடன் சேர்ந்து நம்மில் சிலர் ஒன்றாக சிரமதானம் போன்ற வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் மக்களுடன் தொடர்புகளை உருவாக்க முடிவதுடன் புரிந்துணர்வும் நம்பிக்கையும் ஏற்படும்

வந்திருந்தவர்களில் ஒருவர் பாடசாலைகள் மட்டத்தில் தமது குடும்பம் செய்துவரும் சுய உதவித்திட்டம் தொடர்பாக விளக்கினார். பாடசாலைகளுக்கு தையல் எந்திரங்களை வழங்கியும், இலைக்கஞ்சி காய்ச்சுவதற்கான பாத்திரங்கள், தளபாடங்களை வழங்கியும் தாம் செய்யும் இச்சிறு முயற்சிக்கு ஏற்படும் தடங்கல்கள் எவை என்பது பற்றியும் அவர் பகிர்ந்துகொண்டார்.

என் ஜீ ஒக்கள் செல்லாத தூரக்கிராமங்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சென்று அவர்களுடன் இணைந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சிகளுக்கே முன்னுரிமையளித்துச் செயற்படவேண்டும் என்றும் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது.

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**கண்ணிவெடி அகற்றும் தொழிநுட்பங்கள்**
15-12-2011 | ச. சுதாகர்

**இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றிய வரலாற்றுப்பார்வை**
22-12-2011 | சி. கா. செந்திவேல்

**தமிழில் ஒலி நூல்களை உருவாக்குதல்**
29-12-2011 | மு. மயூரன்



சுப்பிரமணிய பாரதி (டிசம்பர் 11, 1882 - செப்டம்பர் 11, 1921).

பாரதி, ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர்.தமிழின் கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர். தம் எழுத்துக்களின் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர்.

கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி - பாரதி.

தம் தாய்மொழியாம் தமிழின்மீது அளவுகடந்த அன்புகொண்டவர். பன்மொழிப் புலமைபெற்ற பாவலரான இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என கவிபுணைந்த கவிஞராயிறு. சமஸ்க்ருதம், வங்காளம், ஹிந்தி, ப்ரெஞ்ச் மற்றும் ஆங்கிலத்தில் தனிப்புலமை பெற்றவர். அம்மொழிகளின் தனிச்சிறப்புமிக்க படைப்புகளை தமிழ்மொழியாக்கம் செய்தவர். பழந்தமிழ்க் காவியங்களின்மீது தனி ஈடுபாடு கொண்டவர்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**


சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## கண்ணிவெடி அகற்றும் தொழிநுட்பங்கள்

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.
ச. சுதாகர்

கண்ணி வெடி, மிதிவெடி பற்றிய அறிமுகம்

கண்ணி வெடிகளால் இலங்கையில் ஏற்படும் பிரச்சினைகள்

மிதிவெடி அகற்றப்பயன்படுத்தப்படும் தற்கால தொழிநுட்பங்கள்

- மனிதமுறை
- அரை தன்னியக்க முறை
- முழுமையான தன்னியக்க முறை

மிதிவெடி அகற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள்

இப்பிரச்சினையின் எதிர்காலம்

புதிய மலையகம்,
தேசிய கலை இலக்கியப் பேரவை இணைந்து வெளியிடும் பாடல்கள்
ஒலிப்பேழை




"காலம் மாறுது"

வெளியீடு : 18-12-2011 - பி. ப 5 மணிக்கு

கைலாசபதி கேட்போர் கூடம்
தேசிய கலை இலக்கியப் பேரவை, 571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

வரவேற்புரை : ரஞ்சன்

தலைமையுரை : சி. கிருஸ்ணப்பிரியன்

அறிமுக உரை : ப. மகேந்திரன்

கருத்துரைகள் : மு. மயூரன்

க. மகிந்தகுமார்
(பிரபல இசையமைப்பாளர்)

இசை நிகழ்வு

நன்றியுரை : சு. விஜயகுமார்

ஒலிப்பேழை ஒன்றின் விலை 200 ரூபா மாத்திரமே.

அனைவரும் தவறாது வருகை தந்து, ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொண்கின்றோம்.

உப்பு வயல்களின் கீழே
துரதிஷ்டமான அந்த மனிதர்களை
அவர்களின் தேகத்தை உலரவிடாது
பெருகும் நேசர்களின் கண்ணீரை
கரிய நீர் புற்களின் மேலே விடாது காயும்
பயங்கர நாட்களின் சாம்பாரை
தீண்டுவார் யாருமில்லை

விளம்பரப் பதாதைகளின் கீழே
மறத்தலின் விளிம்பிலிருந்தன அவர்தம் நினைவுகள்...

கல்லாலல்ல;
நீரலுமல்ல;
வளியாற் கட்டுகிறேன்
விடாது பின்தொடருமொரு ஒலியால்
அவர்களிட்கொரு நினைவிடம்

- பா அகிலன்

("சரமகவிகள்" தொகுப்பிலிருந்து)




சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.